தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௪௯	திருவள்ளுவர் யாண்டு ௨௰௰௬ இராட்சச, ஆவணி (1975 — ஆகஸ்டு — செப்டம்பர்)	மலர் ௫

சைவமும் வைணவமும்.

நமு. கோவிந்தராய நாட்டார் பி. ஏ, எல். டி

சைவ சமயம், வைணவ சமயம், இவற்றின் கிளைச்சமயங்கள் ஆகியவை இக்காலத்தில் இந்து சமயம் என்ற பொதுப் பெயரால் அழைக்கப்படுகின்றன நம் நாட்டின் வடமேற்கில் இமயத்தில் தோன்றி தென்மேற்கு திசையாக ஓடி அரபிக்கடலில் கலக்கும் சிந்து நதி கிரேக்கர்களால் இந்து என்று அழைக்கப் பெற்றது. ஆகலின் இதற்கு அப்பால் உள்ள நாட்டிற்கு இந்தியா என்றும் அங்கு வாழும் மக்களுக்கு இந்துக்கள் என்றும் பெயர்கள் உண்டாயின இம்மக்களின் சமயம் இந்து சமயமாயிற்று நம் நாட்டின் பழம் பெயர்கள் நாவலந்தீவு, பாரதம் என்பன. நாவலந்தீவு வடமொழியில் ஜம்புத்தீவாயிற்று நாவுக்கரசர் " நாவலத்தீவகத்தினுக்கு நாதரான காவலரே ஏவி விடுத்தாரேனும் " எனக்கூறியிருப்பதனைக் காண்க பாரதம் என்பது புராணக்கதைகளால் ஏற்பட்ட பெயர். ஒரு காலத்தில் அருமணம் என்றும் பின்னர் பக்கோ என்றும் அழைக்கப்பெற்ற நாடு பிர்மபுத்திரா நதிக்கு அப்பால் இருந்ததால் ஆங்கிலேயர்களால் பர்மா என்ற பெயரைப்பெற்று இன்று வழங்கி வருகின்றது இவ்வாறு ஆறுகளால் புதுப்பெயர் பெற்ற நாடுகளும் நாட்டின் பிரிவுகளும் உலகில் பல உள்ளன.

இந்துக்களால் மும்மூர்த்திகளில் ஒருவராகக் கொள்ளப் பெற்ற பிர்மாவின் பெயரால் தனி ஒரு சமயம் ஏற்படவில்லை. இதற்கு புராணக்கதைகளே காரணம். வைணவத்திற்குத் தோற்றம் இருக்கு வேதமே யாயினும் எசுர்வேத காலத்திற்றான் அது ஒரு சமயமாக உருப்பெற்றுப் புராணங்களின் காலத்தில் தனி ஒரு சமயமாக விளக்கமுற்றது. சைவ சமயமோ இன்றும்

வரலாற்ருசிரியர்களால் அறுதியிட்டுச் சொல்லமுடியாத அத்துணைப் பழங்காலத்தில் தோன்றியதாகவுள்ளது. இஃதே போன்று தமிழ் மொழியும் எக்காலத்திலிருந்து வழங்கி வருகிற தென்று அறுதியிட்டுக் கூறமுடியாத பழமையுடையதாயுள்ளது. இவற்றிற்குச் சான்றுகள் பல இருப்பினும் ஈண்டு ஒவ்வொன்றே தரக்கூடும். (இவற்றை வேறு பல கட்டுரைகளிற் காட்டியுள்ளோம்) சர்ஜான் மார்ழல் என்பார் " இன்று வழங்கும் சமயங்களில் சைவமே உலகில் முதலில் தோன்றிய சமயம் " என்று கூறியுள்ளார். (Saivism taken its place as the most ancient living faith in the wold). ஈராசு பாதிரியார் (Father Heras) " இது தமிழ் தான் இன்றைய மொழிகளிலெல்லாம் பழமையான தெனப்பலரால் கொள்ளப்படுகின்ற கருத்திற்கு அரண் செய்கின்றது " எனக்கூறியுள்ளார். (This Confirm the common belief that Tamil is the oldest of the present languages.)

மேல்நாட்டு அறிஞர்களால் வரலாற்று முறைப்படி ஆய்ந்து கூறப்பெற்றுள்ள இவ்வுண்மைகளை நம் பண்டைய தமிழ்ப்பெரு மக்களும் அறிந்திருந்தனர் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. ஐயனரிதனர், பரிமேலழகர் சான்றுகள் ஒரு பால் இருக்க கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பன் கூறியிருப்பதனை ஈண்டுக் காண்போம். இராமகாதையைத் தமிழிற் காப்பியமாகச் செய்தமையால் வைணவப் பெரியார்களால் கம்ப நாட்டாழ்வார் எனக் கூறப்படுகின்ருன். கம்பன், சைவம் வைணவம் ஆகிய இரு சமயங்களிலும் பொது நோக்குடையவன் என்பதனை அவனுடைய காப்பியம் உணர்த்துகின்றது. எனினும் ஒரு கவியில் சிவ பெருமானை

" மூவராய் முதலாகி மூலமதாகி ஞாலமுமாகிய தேவதேவர் " என வருணித்துள்ளான். 'முதலாகி மூலமதாகி' என்ற சொற்ருெடர் சிவபெருமானே முதற்கடவுளென கம்பன் கொண்டுள்ளான் எனக் காட்டுகின்றதன்ருே! இதனுல் கம்பன் சைவ சமயமே முதற்சமயம் எனக்கருதியுள்ளான் என்பது உபசார வழக்கால் கொள்ளப்படும்.

" உழக்குமறை நான்கி னுமுயர்ந்து உலகமோதும்
வழக்கினும் மதிக்க வியினும் மரபின்நாடி
நிழற்பொலி கணிச்சிமணி நெற்றியுமிழ்ச் செங்கண்

தழற்புரை சுடர்க்கடவுள் தந்ததமிழ் தந்தான் "
" என்று முள தென்றமிழ் யியம்பியிசை கொண்டான் "

அகத்திய முனிவரைச் சிறப்பித்து கம்பனல் கூறப்பெற்றுள்ள மேற்காட்டிய கவி, அடி, இவற்றின் பொருளே நோக்குதல் வேண்டும். 'ஒளிவீசும் மழுவினையும், நெற்றியில் விளங்கும் சுடர்விடும் செந்நிறக் கண்ணையும் உடைய சிவபெருமானல் அருளப்பெற்றதும். ஒலிக்கின்ற நான்கு வேதங்களுக்கும் உயர்ந்ததுமாகிய தமிழ்மொழிக்கும் உலகவழக்கினையும் செய்யுள் வழக்கினையும் மரபு வழுவாமல் நாடி முத்தமிழ் இலக்கணம் செய்தவன்' என இப்பாடலுக்குப் பொருள் விரிக்கலாம். 'உழக்கு' என்ற சொல்லுக்கு கலக்கு என்பதே பொருளாயினும் ஈண்டு ஒலிக்கின்ற (சப்திக்கின்ற) என்று பொருள் கோடலே சிறப்பாகும். 'என்று முளதென்றமிழ்' என்றதனல் சிவபெருமானல் அருளப்பெற்ற தமிழ், என்று முள தமிழ் எனக்கொள்க. ஆகலின் சிவசமயம் என்றையிலிருந்து வழங்கி வருகின்றதோ அன்றையலிருந்து தமிழும் வழங்கி வருகின்றதென்பது போதரும் இதனலன்றோ சிவமும் செந்தமிழும் ஒன்றென ஆன்றோர் வழங்கி வரலாயினர். இராமகாதை எழுதினனுயினும் கம்பன் சைவனே என்பார் கூற்றுக்கு மேற்காட்டியவை அரணுகின்றன. அன்றி' கம்பன் வைணவனே எனக்கொண்டால் நடுநிலே பிறழாது உண்மையைக் கூறுகின்றவன் கம்பன் என்று கொள்ளுதல் முற்றும் பொருந்தும்.

இனி வைணவத்தின் தோற்றத்தைப் பற்றி ஆய்வாம். வடமொழியிலும் ஆங்கிலத்திலும் சிறந்த புலமை பெற்ற திருமதி சகுந்தலா ராவ் சாத்திரி என்பவர் நால்வேதங்கள், சிறந்த பல உபநிடதங்கள் இவற்றில் அடங்கிய கருத்துக்கள் பற்றி ஆய்ந்து ஆங்கிலத்தில் ஒரு நூல் இயற்றியுள்ளார். இவர் இருக்குவேதத்தில் கூறப்பெற்றுள்ள விட்டுணு, சூரியன் ஆகிய இரு பெயர்களும் ஒருவரையே குறிக்கின்றன என்றும். விஷ்ணு என்ற சொல்லுக்கு பரந்தது என்பது பொருளாகையால், சூரியனுடைய உதயம், உச்சி, மறைவு என்பன விட்டுணு ஈரடியால் மூவுலகை அளந்தான் என்ற கதைக்கு அடிப்படையாகும் என்றும் கூறியுள்ளார். K. M. முன்ஷி என்ற பேரறிஞர் 'இந்திய கலாச்சாரங்களின் அடிப்படைகள்' (Foundations of Indian culture) என்ற நூலில் இதே கருத்தைத் தெரிவித்துள்ளார்: 'வேதக் கடவுளாகிய விஷ்ணுவுக்கு அமைந்த பெயர் முதலில் சூரியனுக்கு அமைந்த பெயரே ஆகும்' (The Vedic God Vishnu is originally another name for Surya, the sun God) என்று கூறியுள்ளார். இன்றும் தமிழ் நாட்டில் சூரியநாராயணன் என்ற பெயர் வழங்கி வருவது இதனை வலியுறுத்துவதாகும்.

இருக்கு வேதத்தில் கூறப்பெற்றுள்ள பிரசாபதி, விஷ்ணு, ருத்திரன் ஆகிய மூவரும் எசுர் வேதத்திலும் இடம் பெறுகின்றனர். ஆனால் ருத்திரன் இவ்வேதத்தில் ருத்திர சிவனாக மாறுகிறான் இன்னணம் மாறியதன் காரணத்தை Dr. கிரியர்சன் (Dr. Grierson) என்ற அறிஞர் தமது 'இந்திய மொழியாய்வு' (Linguist Survey of India) என்ற நூலில் விளக்கியுள்ளார். அது கீழ் வருமாறு: 'சிவன் என்னும் சொல் தமிழினின்று தோன்றியது. ஆகலின் ருத்திர சிவன் என்னுந்தொடர் ஆரியர் திராவிடக் கொள்கைகளால் மொழியியலில் மாத்திரமின்றி கருத்தோட்டத்திலும் எத்துணை மாறுபட்டிருக்கின்றனர் என்பதனைக் காட்டுகின்றது.' "The term Siva is Tamil in its origin and the conception of Rudra Siva has a tinge of Dravidian ideas It shows how fundamental the Dravidian influence on the Aryans has been not only phylologically but on the whole method of thought."

குறிப்பு

(உலகின் முதன் மொழி தமிழ் என்று நிறுவப்படுதலின் இக் கட்டுரையில் திராவிடம் என்று வருமிடத்தெல்லாம் தமிழ் என்று கொள்க)

'இந்திய கலாசாரத்தின் அடிப்படைகள்' என்று மேல் காட்டப்பெற்ற நூலில் K. M. முன்ஷி என்ற பேரறிஞர் திராவிடச் சார்பால் ஆரியக் கொள்கைகள் எவ்வாறு எத்துணை மாறி வந்துள்ளன என்பன பற்றி மிக விரிவாகக் கூறியுள்ளார். அவற்றில் சிலவற்றை மாத்திரம் ஈண்டு எடுத்துக்காட்டுகின்றோம்:

1. ஆரியர்களின் சமயம், சமயச்சடங்குகள், சமயக்கருத்துக்கள், புராணகதைகள் எல்லாம் திராவிடச்சார்பால் மாறிவிட்டன.

2. சிவன், உமை, நந்தி, முருகன், கணபதி ஆகிய திராவிடத் தெய்வங்களை ஆரியர் ஏற்றுக்கொண்டு வணங்கத் தலைப்பட்டனர் இந்திரன், வருணன், வாயு, அக்கினி சூரியன் முதலிய ஆரியர் தெய்வங்கள் கீழ்நிலை அடைந்தன.

3. ஆரியர் தெய்வங்களை வணங்குவதற்கு முதலில் வேள்வி முறையினையே கருவியாகக் கொண்டிருந்தனர். பின்னர் திராவிடர் முறையாகிய, தண்ணீர், தழை, பூ முதலியன கொண்டு பூசை செய்யும் வழியைப்பின் பற்றலாயினர்.

4. வேண்டிய வரங்களைப் பெறுவதற்காகத் தெய்வங்களைத் திருப்தி செய்ய ஆரியர் மேற்கொண்ட வேள்விமுறை, ஆன்மா தன்முனைப்பாகிய ஆங்காரம் தவிர்ந்து இறைவனடி சார்தலாகிய திராவிடக் குறிக்கோளாக மாறிற்று.

5. கங்கையும் யமுனையும் பிரயாகையில் ஒன்று சேர்வது போல் ஆரியர் கொள்கைகளும் திராவிடர் கொள்கைகளும் கலந்து ஒரே நாகரிகமாயின. வேதத்தை அடிப்படையாகக் கொண்ட ஆரியர் கொள்கைகளுக்கு நிகாமம் என்ற பெயரும், யோகத்தை அடிப்படையாகக் கொண்ட பண்டைய திராவிடர் கொள்கைகளுக்கு ஆகமம் என்ற பெயரும் உண்டாயின.

இவ்வாறு திராவிடர் கொள்கைகளால் ஆரியர் கொள்கைகள் மாறி வந்த காலத்திற்ருன் வடமொழியில் பதிணெண் புராணங்கள் எழுந்தன. அவை வருமாறு :

சிவபுராணங்கள் — 10

சைவம், இலிங்கம், இஸ்காந்தம், மார்க்கண்டேயம், பவிஷ்யம், பிர்மாண்டம், மச்சம், கூர்மம், வராகம், வாமனம்.

வைணவ புராணங்கள் — 4.

வைணவம், நாரதீயம், காருடம், பாகவதம்.

பிர்ம புராணங்கள் — 2.

பிர்மம், பத்மம்.

சூரிய புராணம் — 1 — பாரவார்த்திவம்.

அக்கினி புராணம் — 1 — ஆக்னேயம்.

இப்பதிணெண் புராணங்களின் ஆசிரியர் வியாசர் என்றும் இவற்றைப் பிரசாரம் செய்தவர் சூதர் என்றும் கூறப்படுகின்றது. முதல் நான்கு சிவபுராணங்களின் பெயர்களால் அவற்றில் அடங்கிய பொருள் இவையென ஒருவாறு ஊகிக்கலாம் அடுத்த இரண்டின் பொருள் என்னவோ? கடை நான்கின் பெயர்கள் விட்டுணுவின் முதல் நான்கு அவதாரங்களின் பெயர்களாயிருப்பது வியப்பிற்குரிய செய்தியாயிருக்கின்றது வடமொழி வல்லுநரே இதனை விளக்கக்கூடும் வைணவப் புராணங்களில் முதலாவது வைணவ சமயத்தினைப் பற்றியும், இரண்டாவது நாரதரைப் பற்றியும், மூன்ருவது விட்டுணுவின் ஊர்தியாகிய கருடனைப் பற்றியும் நான்காவது கண்ணனின் (கிருஷ்ணன்)

பிறப்பு, வளர்ப்பு, செயல்கள் பற்றியும் கூறுவனவாகும் இப் புராணத்தில் (பாகவதம்) துருவன் வரலாறு, பிரகலாதன் வரலாறு போன்ற பல கதைகள் அடங்கியுள்ளன. இதில் அடங்கிய கதைகளைப் பற்றி இசைச் சொற்பொழிவாற்றுவோர் பாகவதராயினர்.

புராணங்களின் எண்ணிக்கை கொண்டு மதிப்பிடுவோமானால் சிவனுக்கே தலைமை கொடுக்கப்பட்டுள்ளது புலனாகின்றது சிவபுராணக் கதைகள் பலவற்றிற்கு தமிழ் நாடே பிறப்பிடமாகத் தோன்றுகிறது. இவற்றிற்கு ஓரே ஒரு சான்று எமக்குப் புலப்படுகின்றது: பிர்மன், யமன், மூப்புரம், யானை, தக்கன், அந்தகன், காமன், சலந்தரன் இவர்களை அடக்குதலாகிய வீரச் செயல்களை சிவபெருமான் புரிந்தான் என்பதற்குரிய எட்டு வீரட்டானங்களும் தமிழ் நாட்டிலேயே உள்ளன

பதினெண் புராணங்களின் ஆசிரியர் வியாசர் எனக்கூறுவது பொருத்தமாகத் தோன்றவில்லை. சிவபுராணங்களில் சிவபெருமானை முழு முதற்பொருளாகவும், வைணவப் புராணங்களில் விட்டுணுவை முழு முதற்பொருளாகவும் ஓராசிரியரே கூறுதல் சாலுமோ? மேலும், மாபாரதம், பிர்ம சூத்திரம் இவற்றின் ஆசிரியராகவும், வேதங்களை நான்காகத் தொகுத்தவராகவும் வியாசர் கூறப்படுகின்றார். ஆகலின் இவற்றின் ஆசிரியர் பலராதல் வேண்டும் பல கதைகளில் சிவபெருமானுக்கே முதன்மை கொடுக்கப்பட்டிருப்பதனை கீழ்வரும் சான்றுகளால் அறியலாம்:

1. தக்கன் மகள் உமாதேவி உமாதேவியை மணந்த சிவனுக்கு தக்கன் மாமனார். சிவன் மாமனாரை மதிக்காததால் தக்கன் ஒரு பெருவேள்வி தொடங்கி அதற்குத்தன் மருமகனைத் தவிர ஏனைய தேவர்களையெல்லாம் வரவழைக்கின்றான். சிவன் யாகத்தை அழித்துத் தேவர்களையெல்லாம் சிதறவடிக்கின்றான்.

2. அமிழ்தம் பெறும்பொருட்டு மந்திரகிரியை மத்தாகவும், வாசுகியைக்கயிறாகவும் கொண்டு தேவர்கள் ஒருபாலும், அசுரர் ஒருபாலும் நின்று கடலைக்கடைந்த காலத்து வாசுகி கக்கிய நஞ்சு எல்லோரையும் தகிக்கத் தொடங்கியது. அது காலை சிவபெருமான் நஞ்சை எடுத்துக் கண்டத்தில் அடக்கிக்கொண்டு தேவர்களைக் காப்பாற்றுகின்றான்.

3. விட்டுணுவும் பிர்மாவும் சிவபெருமானுடைய அடிமுடி தேடி அலமருகின்றனர்.

4. விட்டுணு சிவபெருமானைக் குறித்துக் கடுந்தவம் செய்து சக்கராயுதம் பெறுகின்றார்.

5 ஆணவங்கொண்ட பிர்மனுடைய ஐந்தலைகளில் ஒன்றைக் கிள்ளி எறிகின்றார்.

6. திரிபுரம் எரிக்கின்றார்.

7. இராவணனை அடக்கியருள்கின்றார்.

8 விட்டுணுவையே ஊர்தியாகக் கொள்கின்றார்.

9. பாசுபத அத்திரம் பெறுவதற்குச் சிவபெருமானைக் குறித்துத்தவம் செய்யுமாறு கண்ணன் அருச்சுனனுக்கு யோசனை கூறுகின்றார்

10 இராவணனைக் கொன்ற பாவத்திற்குக் கழுவாயாக இராமன் சிவபெருமானுக்குக் கோயில் எழுப்பி வழிபாடு செய்கிறான். (இராமேஸ்வரம்)

இனி, சிவபுராணத்திலிருந்து இருமேற்கோள் காண்போம்:

(1) பிரகஸ்பதி (தேவகுரு) இந்திரனுக்குக் கூறுகின்றார் :—

"மந்திரங்களாலோ, மருந்து மூலிகைகளாலோ, பில்லிச் சூனியங்களாலோ, உலக விவகாரங்களாலோ, இருவகை மீமாஞ்சைகளாலோ, வேதங்களாலோ, வேதத்தின் புனித வாக்கியங்களாலோ, ஆயிரக்கணக்கான வேத மேற்கோள் களாலோ சிவனை அறிய முடியாது. வேறெதனையும் தஞ்சமாகக் கொள்ளாது சிவனையே தஞ்சமெனக் கொண்டு வழிபடுகின்ற உண்மை பக்தர்களாற்றான் சிவனை அறிய முடியும்"

இதனை 'கண்ணுதல்நின் கால்விளையாட்டு' எனும் எம் நூலில் வரும் இரு வெண்பாக்களின் பொருளுடன் ஒப்பு நோக்குக :

ஆரணமும் ஆன்ற பெருநூல் அறிவுரையும்
தாரணை வல்ல தவத்தோரும் — ஏரணம்
கற்ற கணக்கர் கலைஞரும் கண்டறியா
முற்று முணர்ந்தோன் முதல்.
ஒருமை யுளமும் உயிர்க்கெல்லாம் அன்பும்
அருளும் உறைவிடமா ஆன்று — தெருள் நிறைந்த

ஞானப் பெருமக்கள் நண்ணி யுணர வல்ல
வானவன் நம்வாழ் முதல்.

(2) விட்டுணு பிர்மாவுக்குக் கூறுகின்றார் :—

“எல்லாவற்றையும் ஆக்குகிறவனும், காப்பாற்றுகின்றவனும், அழிக்கின்றவனும் சிவனே. அவனே பரப்பிரமம், அவன் குணம் குறி இல்லாதவன். என்றும் உள்ளவன். மாயையை உண்டு பண்ணுகிறவன் அவனே ஆயினும் அம்மாயையில் துவக்கில்லாதவன். அவன் இன்பமயமானவன்”

மொகஞ்சதாரோ முத்திரைகளில், “கடவுள் ஆண் பெண் வடிவினர், ஆக்கல், அளித்தல், அழித்தல் செய்பவர், எட்டுருவுடையவர்” போன்ற வாக்கியக்கோவைகள் காணப்படுகின்றன என ஈராசு பாதிரியார் கூறியிருக்கின்றார். ஆகலின் கடவுளைக்குறித்த சிவ புராணக்கருத்துக்கள் மிகமிகப் பழங் காலத்திலிருந்தே தொடர்ந்து வருவன என்பதனையுணரலாம். கடவுள் ஆண் பெண் வடிவினர் என்பதனை நம் சைவத் திருமுறைகள் மிக விளக்கமாகவும் விரிவாகவும் புலப்படுத்துகின்றன. மணிவாசகப் பெருமானுடைய

‘உடையாள் உன்றன்நடு விருக்கும் உடையாள்
நடுவுள் நீ யிருத்தி’

என்ற பாடலும், பரஞ்சோதியாருடைய ‘சத்தியாய்ச்சிவமாய்’ என்ற பாடலும் இறைவனுடைய இத்தன்மையை விளக்குகின்றன. அடியார்களுக்கு அருள் பாலிக்கும் போதெல்லாம் சிவபெருமான் உமாதேவி யாருடனேயே எழுந்தருளுகின்றான் என்பதனை பெரியபுராணம் முதலிய தமிழ்ச் சிவபுராணங்கள் தெரிவிக்கின்றன. உமாதேவியாருடன் எழுந்தருளி சிவபெருமான் தமக்கு பொற்கிண்ணத்தில் பால் அருளினமையை திருஞான சம்பந்தர்

“போதையார் பொற்கிண்ணத் தடிசில்பொல்லா தெனத்
தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்
காதையார் குழலினன் கழுமல வளநகர்ப்
பேதையா ளவனுடன் பெருந்தகை யிருந்ததே”

என்ற பாடலில் குறிப்பித்துள்ளார்.

‘மாதர்ப் பிறைக்கண்ணியானை’ என்ற திருவையாற்றுக் கயிலைக்காட்சி பதிகத்தில் நாவுக்கரையர் இக்கருத்தினை மிக விரிவாகக் காட்டியுள்ளார். இதனையே

" பண்ணொடு நால்வரும் பாடிய பாடல்கள்
கண்ணுத லோடு கலந்துறையும் — பெண்ணையும்
கூறுமிதன் உண்மையைக் கூர்ந்தறிந்து கொள்ளுமின்
ஏறுடை யான் இன்பக் கழல் "

என்ற எமது வெண்பாவில் காட்டியுளேம். இறைவனை ஆணும் பெண்ணுமாய்க் காண்பது சைவ சமயத்தின் தனிச்சிறப்பு. இதனையே இந்துக்களின் பிற சமயத்தினர் பின்பற்றித் தாங்கள் வழிபடும் கடவுளர்க்கு அம்மன்களைப் படைத்துக்கொண்டனர். இதனைக் குறித்துப் பேரறிஞர் K. M. முன்ஷி.

" The Conception of Siva and Parvathy in Indian Culture is inspiring; the noblest conception of the spiritual unity of man and woman. "

இதன் பொருள் — 'சிவனும் பார்வதியும் ஒன்றெனும் இந்து சமயக்கொள்கை உணர்ச்சி மிக்கது. இது ஆண் பெண் ஆன்மீக ஒருமைப்பாட்டை மிகமேலான முறையில் விளக்குகினறது'

மக்களுள்ளும் ஆண் பெண் உடலமைப்பை நமக்குத்தெரியா வண்ணம் ஓரச்சாகவே இறைவன் படைத்திருக்கின்றானோ என ஐயுற வேண்டியுள்ளது.

ஆண் பெண்ணாக மாறுவதனையும் பெண் ஆணாக மாறுவதனையும் செய்தித்தாள்கள் மூலம் நாம் இன்று அறிந்து வருகின்றோமன்றோ !

தொல்காப்பியத்திற் கூறப்பெற்ற காடுறை தெய்வமாகிய மாயோனுக்கும் புராணங்களிற் கூறப்பெற்ற விட்டுணுவுக்கும் தொடர்புண்டா என்பது விளங்கவில்லை. சங்க நூல்களில் திருமால் வழிபாடு ஓர்ரா வழி காணப்படுகின்றது. சிலப்பதிகாரம் தொடர்பினைக் காட்டுகின்றது பிர்மாவின் பெயரால் ஒரு சமயம் தோன்றவில்லை என மேலே காட்டினோம். தமிழ் நாட்டில் திருக்கண்டியூரில் பிரமன்கோயில் ஒன்றுள்ளது. இது சிவபெருமான் பிர்மாவினை அடக்கிய வீரத்தைக்காட்ட எழுந்த கோயில் இக்கோயிலின் பக்கத்தில் விட்டுணு கோயில் ஒன்றுளது இக்கோயிலின் மூலவர் பெயர் 'ஹரசாபகரன்' என்பது. இதன் பொருள் பிர்மனைக் கொன்றதால் சிவனுக்கு வந்த சாபத்தைத் தீர்த்தவன்! வடநாட்டில் ஆஜ்மீர் என்ற நகரில் பிர்மாவுக்கும் சரசுவதிக்கும் தனித்தனி கோயில்கள் இருக்கின்றன எனவுணர்கின்றோம். தமிழ் நாட்டில் ஆழ்வார்களால் பிரபந்தங்கள் ஏற்பட்ட பிறகு இராமாநுசரின் முயற்சியால் வைணவத்தில் தென்கலை என்ற பிரிவு ஏற்படலாயிற்று.

தென்கலை என்பது பிரபந்தங்களைக் குறிக்கும் தென்கலையாளர் வடமொழி வேதங்களை விட பிரபந்தங்களையே மிகவும் போற்றி வருகின்றனர்.

திருமூலருடைய 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்பது தான் தமிழ் மக்களுடைய அடிப்படைக் கொள்கை. நாயன்மார்கள் சிவபெருமானை முழு முதற்பொருளாகக்கொண்டு அருட் பாடல்களால் வழிபாடு செய்து அவனருளாலே அற்புதங்கள் பல நிகழ்த்தி வந்தனர். இவ்வாறே ஆழ்வார்கள் விட்டுணுவை முழு முதற்பொருளாகக் கொண்டு அருட் பாடல்களால் வழிபாடியற்றினர். நானே பிரமம் என்ற கொள்கையில் நம்பிக்கையுடையோரும் கோயில்களுக்குச் சென்று இறைவனை வழிபடுகின்றனர் இக்கொள்கை நாட்டிற் பரவுவதற்குக் காரணமாயிருந்த ஆதிசங்கரர், சிவானந்தலகரி, சௌந்தர்யலகரி, பஜகோவிந்தம், பஞ்சயத்ன பூசை முதலிய நூல்களையாத்து இறை வழிபாடு செய்ததுடன் நில்லாமல் பல தலங்களுக்குச் சென்று வழிபாடு செய்து வந்துள்ளார். சௌந்தர்யலகரி என்ற நூலில் திருஞானசம்பந்தக் குழந்தையினையும், சிவானந்த லகரியில் கண்ணப்ப நாயனாரையும் இப்பெரியார் மிக உருக்கத்துடன் குறிப்பிட்டுள்ளார். இவர் நூற்களில் அடங்கியுள்ள கருத்துக்களுக்கும் இவருடைய ஏகான்ம வாதக் கொள்கைக்கும் உள்ள தொடர்பினை எம்சிற்றறிவால் தெளிந்துகொள்ள முடியவில்லை.

ஏகான்ம வாதமாகிய வேதாந்தக்கொள்கையும், முப்பொருள் கொள்கையாகிய சைவ சித்தாந்தமும் ஒரே முடிவுடையன என்று நிறுவுதற்பொருட்டு அண்மையில் காலஞ்சென்ற S. T. S. யோகியார் என்ற பெரியார் கீழ்வருமாறு எழுதியுள்ளார்:—

"While the Vesantin dies in the Pure Being of 'Tat-Sat', the Siddhantin lives in the Pure Being consciousness of Sat-Cit-Ananda. Infact active Vedanta is Siddhanta and inactive Siddhanta is Vedanta. The Vedantin is lost in the super-Consciousness, but the Siddhantin lives it. Both are inter-related and intimatily and essentially identical,"

இதன் மொழிபெயர்ப்பு:

"வேதாந்திதனி உண்மைப் பொருளாகிய இறைவனுடன் தன் உணர்விழந்து ஒன்றுகிவிடுகின்றுன் சித்தாந்தி தனி உண்மைப் பொருளாகிய இறைவனுடன் தன் உணர்வுடன் சச்சிதானந்தம் ஆகிவிடுகின்றுன். உண்மையாதெனில் உணர்வுடன் கூடிய வேதாந்தம் சித்தாந்தம் ஆகும். உணர்விழந்த

சித்தாந்தம் வேதாந்தம் ஆகும் வேதாந்தி உணர்விழந்து இறைவனுடன் ஒன்ருகி விடுகின்ருன். சிந்தாந்தி உணர்வுடன் இறைவனுடன் ஒன்ருகின்ருன். ஆகவே இரண்டும் ஒன்றற் கொன்று தொடர்புடையனவாகி உண்மையில் ஒன்றேயாம் தன்மை அடைகின்றன"

இவ்விளக்கத்தின். இரண்டும் ஒன்றே என்ற முடிவை யாம் ஏற்பதற்கில்லை. இரண்டும் வெவ்வேறே யாம். தன்னுணர் விழந்து வேதாந்தி இறைவனுடன் ஒன்ருகிவிடின் இறைவனே யாகி விடுகிருன் என்பதுதான் பொருளாகும். ஆகலின் இன்பம் துய்ப்பது யார், இறைவனு, வேதாந்தியா என்ற கேள்வி பிறக்கின்றது சித்தாந்தியின் நிலேயோ, சத் (இறைவன்) சித். (ஆன்மா) ஆனந்தம் (இன்பம்) என்பது. ஆணவ மல வலு விழந்த ஆன்மா இறைவனுடன் இரண்டறக் கலந்து இறைவனுடைய இறைமைக்குணங்களேப் பெருது இன்பம் துய்க்கின்றது என்பதே சைவ சித்தாந்தத்தின் முடிபாகும்

மேலும் இப்பெரியார் வேதாந்தக் கொள்கையினை சரிவர விளக்கவில்லே என்பது எமது கருத்து. ஏனெனில் வேதாந்தி யென ஒருவரை இறைவனிலிருந்து பிரித்துப்பேசுவது ஏகான்ம வாதம் ஆகாது. மாயையால் கட்டுப்பட்டுள்ள 'நான்' எனும் 'பிரமம்' மயக்கம் நீங்கி பிரமம் ஆகின்றது என்பதுதான் வேதாந்தக் கொள்கையென யாம் கருதுகின்ருேம்.

கீழ்வரும் இரு வெண்பாக்கள் எம் 'கண்ணுதல் நின்கால் விளையாட்டு' எனும் நூலில் வந்துள்ளவை. முதல் வெண்பாவில் சைவ சித்தாந்தத்தின் அத்துவித முத்தி பற்றி எழக் கூடிய ஐயமறுக்க முயற்சி செய்யப்பட்டுள்ளது. இரண்டாம் வெண்பாவில் ஏகான்ம வாதக் கொள்கை துவைதக் கொள்கை இரண்டினையும் மறுக்க முயற்சி எடுக்கப் பெற்றுள்ளது.

அத்துவித முத்தியென்ப தாணவ மென்னுமலம்
செத்தபின் உண்டா மெனிற்சிவனே—சித்தே
இரண்டற ஒன்றற ஈண்டுதல் ஆமோ
முரணின்றிக் கூறவேற்கு முந்து.
இரண்டில்லே ஒன்றென்பார் என்னேயிலே என்பர்
இரண்டென்பார் வீடில்லே என்பர் — முரண்டாமல்
மூன்றென்பார் ஒன்றிரண்டாம் அத்துவித
முத்திகண்டார்
ஏன்று கொண் டின்பெய்து வீர்.

நற்செயல்கள்.

புலவர். அ. வைத்திலிங்கம்,
மண்டபம் முகாம்.

1 வானத்து மீன்களும் வையத்துப் பூக்களும்
வாரி இறைக்கின்ற பேரழகை,
கானத்துப் புட்களும் காரிகைப் பெண்களும்
காதில் இசைத்திடும் இன்னொலியை;
மானத்தைத் தம்முயிர் தன்னிலும் மேலென
மாண்புடன் கொள்பவர் வீரத்தினை
ஞானத்துடன் எண்ணி நற்றமிழ்ப் பாட்டினில்
நான்செய்ய முற்படல் நற்செயலே!

2 சின்னக் குழந்தைகள் செய்கிற சேட்டைகள்
சிந்தை களிகொளச் செய்வனவே
கன்னக் கதுப்பினில் கள்முத்தம் தந்திடக்
கள்வெறி ஊறிடும் அற்புதமே!
தின்னத் தருகின்ற தின்பண்டம் கண்டபின்
செற்றம் மறந்திடும் சிந்தையினை
உன்னத் தகுந்திடும் உள்ளங்கொண் டாலதை
ஒண்டமிழ் ஆக்குதல் நற் செயலே!

3 பச்சை நிறத்தினில் பட்டுத் துணிகொண்டு
பாவிய கம்பளம் புற்றரையோ?
உச்சி வெளியினில் பூமிப்பெண் சுற்றிய
ஒள்ளிய மெல்லுடை மேகங்களோ?

மெச்சத் தருந்தது மேதினி யாதலின்
மின்னல் ஒளிர்வது பார்த்திடவோ?
எச்சம் புகழென யாவரும் வாழ்ந்திடின்
இப்புவி பாடிடல் நற்செயலே!

4 சித்திரம் போலொரு சேயிழைக் காதலில்
சேர்வது பேரின்பம் ஆகுமென
இத்தரை வாழ்வினில் கண்டுகொண் டாலது
இன்பியல் வாழ்க்கையின் ஏணியடா
முத்திரைப் பொன்பொருள் மற்றும் அழிவன
மூடனும் நீயிலை அன்புடனே
முத்தமிழ் செப்பிடும் காதல் பெருக்கினில்
மூழ்கல் அருளெனும் நற்செயலே!

5 பைந்தமிழ்ப் பாட்டினில் ஒன்றிய உள்ளமும்
பாவலர் சொல்வழிச் செல்லுதலும்
மைந்தர்க் கடனென மக்களைத் தந்தையர்
மாண்புறச் செய்கிற நன்றிகளும்
சிந்தனைச் செல்வமும் சீர்பெற வேண்டிடின்
சீரிய கல்விகள் ஓங்கிடவே
தந்திடும் தாய்மொழி தெய்வ மெனச் சொலித்
தாய்த்தமிழ் போற்றிடல் நற்செயலே!

பாவேந்தரின் குறளோவியங்கள்

இராம. சுப்பிரமணியன், எம். ஏ., பி. ஜி. எல்., பி லிப். எஸ்ஸி.,
4-B, தீத்தாரப்ப முதலி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5.

தேனொழுகும் சுவைப்பாடல் எழுதிப்போந்த
தெள்ளுதமிழ்ப் பாவேந்தன் பாரதிதாசன் !

மக்களினம் மன நலத்தோடு மாண்புற்று வாழ்வதற்கு வழிகாட்டும் ஒளி விளக்காகத் திருக்குறளை இன்றைய உலகம் போற்றுகிறது. தமிழ்ப் பண்பாட்டின் பிழம்பாகவும் தமிழருடைய அறிவாற்றலின் முடிமணியாகவும் அது விளங்கி வருகிறது.

தெய்வப் புலவர் திருவள்ளுவர் இயற்றிய, அமிழ்தினும் இனிய தமிழ் மொழியில் தலைசிறந்த இலக்கியமாக விளங்குவதோடு, இம்மை, மறுமைக்குரிய அரிய கருத்துக்களைக் கொண்டிலங்கும் உலகப் பொது மறையாகவும் இருக்கிறது முக்காலத்துக்கும் ஏற்ற பேருண்மைகளை ; எந்நாட்டவரும், எச்சமயத்தாரும் எக்கொள்கையினரும் ஏற்றுப் போற்றும் நற்கருத்துக்களை, அள்ளி அள்ளி வழங்கும் தெள்ளமுதமாக இருப்பதினுல், திருக்குறள் இன்று உலகம் முழுவதும் ஏற்கும் பொது மறையாகும் அரிய பெருமையை அடைந்திருக்கிறது, இதனுலன்றோ நம் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட தேசீய கவிஞர் சுப்பிரமணிய பாரதியார்,

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே — தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"

என்றார்.

திருவள்ளுவரின் குறளோவியங்கள் எவ்வாறு ஏரும் எழிலும், வலிவும் பொலிவும் பெற்றுப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் கவிதைகளில் திகழ்கிறது என்பதையே இக்கட்டுரை கோடி காட்டுகிறது.

வாழ்க்கைத் துணைநலம்

கற்புநலத்தையும் அதன் ஆற்றலையும் திருவள்ளுவர் உணர்த்தும் திறம் இன்பம் பயப்பது. கற்பு எனும் கலங்கா

நிலைமையுடையவளைத் தெய்வமும் தொழும்; பெய் என்று அவள் கட்டளையிட்ட அளவிலே மழை பொழியும் என்கிறார்.

தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை

என்று திருவள்ளுவர் கூறுவதைப் புரட்சிக் கவிஞர்.

நிலந்தொழேன் நீர்தொழேன் விண்
விளி தொழேன் எரிதொழேன் நான்
அலங்கல் சேர் மார்பன் என்றன்
அன்பனைத் தொழுவ தன்றி

என்ற வரிகளில் கூறுகின்றார்.

மணவழகரின் மனையாட்டி வள்ளுவர் வழியில் பெண்மை நலஞ் சான்றவள். தன் நெறி இஃதென அவள் கூறுவதைக் கேளுங்கள் :

தற்காத்துக் தற்கொண்டானைத்
தான்காத்துத் தகைமை சான்ற
சொற்காத்துச் சோர்வி லாளே
பெண்என்று வள்ளு வர்தாம்
முற்சொன்ன படியே என்றன்
முத்தினைக் காத்து வந்தேன்.

மக்கட்பேறு

தாய் தந்தை இருவரிலும் தந்தையின் கடமை பெரிது. தன் மகன் கல்வி கேள்வி பெற்று வளர்வதற்கு வேண்டிய வாய்ப்புக்களைப் பெற்று மகன் அறிவுடையவனாய் வளர்ந்து, அறிஞர் கூட்டத்தில் முன் நிற்கும்படியாகச் செய்ய வேண்டும்; இதுவே தந்தை மகனுக்குச் செய்ய வேண்டிய நல்ல கடமை யாகும் மக்களைப் பொருள் நிறைந்தவர்களாகச் செய்வதைவிட, அறிவு நிறைந்தவர்களாகச் செய்வதே பெற்றோரின் கடமை.

தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்.

கவிஞர், 'குடும்ப விளக்கில்' — மணவழகர் தன் மக்களை வளர்த்த பாங்கினைக் குறிப்பிடுவதே மேலே கண்ட குறளின் உட்கருத்தே யாகும்.

நவையறு கல்வியால் நன்மக்கள் தமை
அவையினில் முதன்மை அடையச் செய்தேன்

என்றும் அவர்கள் நிரம்பிய உள்ளத்தோடு வாழ்ந்து வருவதற்குக் காரணம் :

மைந்தர்க்குக் கல்வி சேர்த்தோம்;
மகள்மார்க்கும் அவ்வா றேயாம்
எம்தக்க கடன் முடித்தோம்
இனிதாக வாழுகின்றோம்

தம் மக்களுக்கு உரிய கடமையைச் செய்ததோடு அல்லாமல் உலகத்தார்க்கும் கடமையினைச் செய்தார்

விருந்தோம்பல்

விருந்தோம்புதல் ஒரு வேள்வி; இந்த வேள்வியின் பயன் இவ்வளவு என்று கூறுவதற்கு ஓர் அளவு இல்லை; விருந்தினராக வந்தவரின் தகுதிக்கு ஏற்ற பயன் உண்டாகும். இவ்வாறு விருந்தினரைப் போற்றி இந்த வேள்வியின் பயனைப் பெறுதவர்கள் வாழும் இல்வாழ்க்கை பயனற்றதே; வருந்திப் பொருளைத் தேடிச் சேர்த்துக் காத்துப் பின்னர் ஒரு காலத்தில் அதை இழந்து விட்டுப் பற்றுக்கோடு இல்லையே என்று அவர்கள் வருந்த நேரிடும். ஆகையால். விருந்தோம்புதலைப் போற்றாத அறியாமை இருந்தால், அது செல்வம் உள்ள போது வாய்த்த வறுமை என்றே சொல்ல வேண்டும்; அறிவில்லாதவர்களே அந்த வறுமைக்கு ஆளாவார்கள்.

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

என்ற திருக்குறளினை,

நற்றமிழர் சேர்த்த புகழ்
ஞாலத்தில் என்னவெனில்
உற்ற விருந்தை
உயிரென்று பெற்றுவத்தல்

என்று விருந்தினரை உயிருக்கு இணையாகக் கூறிச் சிறப்பிக்கின்றார்

இல் வாழ்வில் விருந்தோம்பல் இன்றியமையாத பகுதியாகும். வீட்டிலிருந்து பொருள் சேர்த்துக் காத்து வாழும்

வாழ்க்கை எல்லாம் விருந்தினரைப் போற்றி அவர்களுக்கு உதவி செய்யும் அறத்தின் பொருட்டே என்று திருவள்ளுவர் கூறுகின்ருர்.

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு

இத்தகு பண்பிலே பாவேந்தரின் குடும்பப் பெண் சிறந்து விளங்குகின்ருள். வீட்டுக்கு வந்த விருந்தினரை வரவேற்கின்ருள்.

திருவிளக் கேந்திவந்து
தெருவினில் வரவேற்கின்ருள்

பண்புடைமை

மக்கட் பண்பு என்ருல் என்ன? நீதியையும் அறத்தையும் விரும்பும் தன்மை ஆகும். இவற்றை விரும்புகின்றவர்களே உலகத்திற்குப் பயன்படுவார்கள் அவர்களுடைய பண்பையே உலகமும் பாராட்டும் அவர்கள் இருப்பதால்தான் உலக வாழ்க்கை உண்டு என்று சொல்லக் கூடியதாய் நடைபெறுகின்றது. இல்லையாளுல் உலகம் வெறு மண்ணுய் நின்று அழியக் கூடியதாகும்.

பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்; அஃதின்றேல்
மண்புக்கு மாய்வது மன்

இதனையே கவிஞர் மங்கையர் குலமே கிள்ளை வாட்பொறையின் தங்கை — மகிணனின் மெய்க்காதலி — "காதலா? கடமையா?" வில் சிறப்புப் பெற்றது என்று அவர் நலம் பேசுகிருர். அங்கே தம் உடைமையால் சிறப்புற்ற மற்ற பொருட்களும் கூறப்படுகின்றன நிலவு உடைமையால் வானம் சிறந்தது; முத்து உடைமையால் கடல் சிறந்தது: மங்கையர் உடைமையால் மக்கள் சிறந்தனர்!

தரையோ. தாமறிந்தது பிறர்க்குச் சாற்றும்
அருமை மக்களால் பெருமை பெற்றது.

தனிமைத் துன்பம்

தலைவி தன் தனிமையைப் பற்றியும் இராக் காலத்தைப் பற்றியும் எண்ணிக்கொண்டிருக்கும்போது, அவள் மனம் வேருெரு வகையாகத் திரும்புகிறது. அந்த இராக் காலமும்

தன்னைப் போலவே தனிமையுற்றுக் கிடப்பதை உணர்கிருள். இராக் காலம் வருகிறது; எல்லா உயிர்களையும் உறங்கச் செய்கிறது; தான் மட்டும் உறங்காமல் கிடக்கிறது. அதன் நிலையும் இரங்கத் தக்கதாக இருக்கிறது. "இராக் காலம் உயிர்களுக்கெல்லாம் நன்மை செய்கிறது. ஆயினும் இரங்கத் தக்கதாக இருக்கிறது இதன் நிலை. இதற்கு என்னைத் தவிர, துணையே இல்லையே!" என்கிருள்.

மன்னுயிர் எல்லாம் துயிற்று அளித்துஇரா
என்அல்லது இல்லை துணை.

பொன்முடியின் காதலி—தலைவி பூங்கோதை. தன் காதலன் பொன்முடியை எண்ணிக்கொண்டே இரவை, இமை பொருந்தாமல் கழிக்கிருள். மறுநாள் காலையிலே பூப்பண்டாரம் போல வேடம் புனைந்து வரப்போகிருன் பொன்முடி. கேட்கவா வேண்டும்? எப்போது விடியும்? என்று விடியாத நேரத்தையும் விழியாத உலகத்தையும் பழிக்கிருள்.

"சேவலுக்கும் இன்னுமென்ன தூக்கம்! இந்தத்
தெருவார்க்கும் பொழுதுவிடிந் திட்டசேதி
தேவையில்லை போலும்! இதைதான்என் தாய்க்குச்
செப்புவதும் சரியில்லை; என்ன கஷ்டம்!
பூவுலகப் பெண்டிரெலாம் இக்கா லத்தில்
புதுத்தினுசாய்ப் போய்விட்டார்! இதெல்லாம் என்ன?
ஆவலில்லை இல்லறத்தில்! விடியும் பின்னுல்;
அதற்கு முன்னே எழுந்திருந்தால் என்ன குற்றம்!"

கனவின் உதவி

காதலி தன் துணையை நினைந்து ஏங்கியபடியே பகற்பொழுதைக் கழிக்கிருள். காதலர் எங்கே இருக்கிருரோ, என்ன செய்கிருரோ. எப்போது திரும்புவாரோ, அவரைப் பற்றிய செய்தி ஒன்றுமே தெரியவில்லையே, அவர் யாரிடமேனும் செய்தி சொல்லி அனுப்பக் கூடாதோ என்று பற்பலவாறு எண்ணி எண்ணி ஏங்குகிருள். இவ்வாருன ஏக்கத்திற்கு இடையே பகற்பொழு தெல்லாம் கழிந்த பிறகு, இரவு வருகிறது. இரவிலும் நெடுநேரம் உறக்கம் இல்லாமல் விழித்தபடியே வருந்துகிருள். கடைசியில் எவ்வாருே அரிதில் வந்து அமைகிறது உறக்கம். அந்த உறக்கத்தில் கனவு ஒன்று வருகிறது, அவ்வாறு வந்த கனவில், அவள் காண்பவை என்ன?

கனவில் காதலன் வருகிறான்; காதலன் தன்னுடன் இருந்து மகிழ்வது போலவே கனவு காண்கிறாள். உடனே விழித்தெழு கிறாள். சுற்றிப் பார்க்கிறாள் கண்டது கனவு என உணர்ந்து ஏமாற்றம் அடைகிறாள்.

மீண்டும் அந்த இனிய காட்சிகளே அவள் நினைவுக்குத் திரும்பத் திரும்ப வருகின்றன. அவள் எண்ணிப் பார்க்கிறாள். "என்ன விந்தை! படுக்கையில் படுத்துக் கண்மூடி உறங்கிய போது, அவர் என் தோள்மேல் கிடந்தார். விழித்த பிறகு என் நெஞ்சிலே குடிகொண்டிருக்கிறார். எவ்வளவு விரைவில் இப்படி மாறுகிறார்?" என்கிறாள்.

துஞ்சுங்கால் தோள்மேலர் ஆகி விழிக்குங்கால்
நெஞ்சத்தார் ஆவர் விரைந்து.

என்னும் திருவள்ளுவரின் திருக்குறள்,

சிந்தையில் தெரிவாள்; கையால்
தீண்டுங்கால் உருவம் மாறி
அந்தரம் மறைவாள்!

என்று "எதிர்பாராத முத்தத்தின்" காதலன் — தலைவன் பொன்முடியின் உள்ளமாக வெளிவருவதைக் காணலாம்.

குடும்ப விளக்கால் குறளைத் தந்தோன்

பாவேந்தரின் குடும்பவிளக்கு மூன்றாம் பகுதியான திருமணமும் காதல் மணம் கமழுறகிறது விருந்துக்கு வந்த விடத்தில் மங்கைமேல் காதல் கொண்டு திரும்பிய வேடப்பனுக்கு மீண்டும் வாய்ப்பு ஏற்படுகிறது.

"இவளிடம் உள்ள நோக்கு இருவகை: ஒன்று எனக்குத் துன்பம் தருகின்றது; மற்றொன்று அதற்கு மருந்தாக நின்று அந்தத் துன்பத்தைத் தீர்க்கின்றது. யான் காணாதபோது என்னைக் கண்டு களவு கொள்கின்ற சிறு நோக்கம் இவளிடம் உள்ளது. யான் காணாதபோது கண்டு, ஏதோ கருத்தை உட் கொண்டு நாணி இறைஞ்சுகின்றாள்; அதுதான் எங்களிடையே அன்பை வளர்க்கும் நீராகின்றது. யான் நோக்கும்போது தான் எதிர்நோக்காமல் நாணித் தலைகுனிந்து நிலத்தை நோக்குகின்றாள்" என்று அவளுடைய உள்ளக் குறிப்பைக் கண் வாயிலாக அளந்தறிகின்றான்:

இருநோக்கு இவள்உண்கண் உள்ளது ; ஒருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து.
யானோக்குங் காலை நிலன்நோக்கும் ; நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும்.

மேலே கண்ட இரு குறள்களின் சாற்றினைப் பிழிந்து பாவேந்தர் நமக்கு வழங்குகின்றார் :

என்னையே தனியி ருந்து
நோக்குவாள், யான்நோக் குங்கால்
தன்னுளம் எனக்கீ வாள்போல்
தாமரை முகமக விழ்ந்து
புன்னகை புரிவாள். யானோர்
புறஞ்சென்றால் அகந்து டிப்பாள்.

இன்ப துன்பம்

காதல், மற்றத் துறைகளுக்கும் எடுத்துக் காட்டாக விளங்குகிறது. காதலர் கூடும்போது உணர்வது முழுமன இன்பமாகும்; காதலர் பிரியும்போது உணர்வது முழுமனத் துன்பமாகும். அறிவு வளர வளரப் பழைய அறியாமை காணப்படுவதுபோல், காதலியுடன் மகிழ மகிழக் காதல் காணப்படுகின்றது அதனையே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்

அறிதோறும் அறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு.

என்று திருவள்ளுவர் கூறுகின்றார். எனவே, திருமணமாகிப் பல்லாண்டுகள் கழித்துப் பல குழந்தைகளைப் பெற்ற பின்னரும் ''குடும்ப விளக்கில்'' வரும் தலைவனும் தலைவியும் இன்றைக்கு மணம் புரிந்தோர் என்று சொல்லும் படியாக இருந்தார்களாம். இவ் அழகிய காட்சியைக் கவிஞர் இதோ பாடுகிறார்.

துணைவி சொன்ன புதுச் செய்தி.

அன்றைக்கு மணம் புரிந்த
அழகியோன் வீடு வந்தான்;
இன்றைக்கு மணம்பு ரிந்தாள்
எனும்படி நெஞ்சில் அன்பு
குன்றாத விழியால், அன்பன்

குளிர்விழி தன்னைக் கண்டாள்;
'ஒன்றுண்டு சேதி' என்றாள்;
'உரை' என்றான் 'அம்மா அப்பா
வந்தார்' என் றுரைத்தாள். கேட்டு
'வாழிய' என்று வாழ்த்தி,
'நொந்தார்கள்' என்று கேட்டு
.. ..
நடந்திட லாமா?' மேலும்

அன்றன்று புதுமை

அன்றிலடி நாமிருவர் பழமும் பாலும்
ஆருக்கு வேண்டுமடி என்றன் ஆசைக்
... .
ஆருயிரே நீகொடுக்கும் இன்பம் என்றான்.

அறிவுப் பரிசு!

வணிகத் தொழில் முடித்த தலைவன் வீடு வருகின்றான். தங்கட்குப் பிள்ளை வளர்ப்புப் பரிசு கிட்டியதைக் கூறுகின்றான். அதற்குக் காரணம்,

"ஆல் ஒடிந்து வீழ்ந்தாலும் —
தோள்கள் தாங்கும் அப்படி நாம் —
பிள்ளைகளை வளர்த்ததே"

என்கின்றான். இக்காரணம்

இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்தூன்றும்
நல்லாள் இலாத குடி

என்ற குறள் தந்த அறிவுப் பரிசாம்

வான் புகழ் கொண்ட தமிழ்நாடு!

கவிஞருக்கு வள்ளுவர் என்றாலே, தெள்ளமுதம்! அறம், பொருள். இன்பம் அனைத்தும் கொடுத்த திருவள்ளுவரைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே! என்று புகழ் பாடுகின்றார். 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்ற பாரதியின் குரல் சாயலைக் காண முடிகிறது

"பழந்தமிழ் நாட்டின் பண்பே பண்பு' என,
'அன்னார் ஆய்ந்த அறமே அறம்' என, —
ஒழுக்கமே ஒழுக்க இலக்கணமாம்' என

வள்ளுவர் நாட்டினார்; தெள்ளுதமிழர்
சீர்த்தியைத் திறம்பட எடுத்துக் காட்டினார்"

என்பது திருக்குறள் பற்றிய புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் கருத்து ஆகும்.

துணை நூல்கள்:

1. பாரதிதாசன் : குடும்ப விளக்கு, பதி. 2., பாரி நிலையம், சென்னை, 1960.
2. : இளைஞர் இலக்கியம், பதி 2, பாரி நிலையம், சென்னை, 1961.
3. : காதலா? கடமையா? பதி. 2, பாரி நிலையம், சென்னை, 1974.
4. : எதிர்பாராத முத்தம்
5. குருசாமி, ம. ரா. போ : எதிரொலி, மெர்க்குரி புத்தகக் கம்பெனி, கோயமுத்தூர், 1974.
6. வரதராசன், மு : திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம், பதி. 6,. பாரி நிலையம், சென்னை, 1962.
7. : குறள் காட்டும் காதலர், தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம், சென்னை, 1968
8. ஞானசம்பந்தன், அ ச : இன்றைய இலக்கியம்: பாரதியும்-பாரதிதாசனும். மெர்க்குரி புத்தகக்கம்பெனி, கோயமுத்தூர், 1971.
9. வீராசாமி, தா. வே : பட்டறையிலே பாரதிதாசன், மெர்க்குரி புத்தகக் கம்பெனி, கோயமுத்தூர், 1971.
10. சாலை இளந்திரையன் : புரட்சிக் கவிஞர் கவிதை வளம், பாரி நிலையம், சென்னை, 1965.
11. திருநாவுக்கரசு, க. த. : திருக்குறளில் கற்பனைத் திறனும் நாடக நலனும், சென்னைப் பல்கலைக் கழகம். சென்னை, 1973.
12. இராமநாதன். ந. : கவிஞரும் காதலும், முத்தமிழ் நூலகம், சென்னை, 1960.

தமிழ்ப் பண்பாட்டுப் பெருவிழா ஏற்பாடுகள் தீவிரம்

டாக்டர் சாலை இளந்திரையன்,
டில்லி பல்கலைக் கழகம்.

உலகெங்கும் வாழும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் பங்கு கொள்ளும் பண்பாட்டுப் பெருவிழா ஒன்று சென்னையிலும் தமிழகத்தின் சில பெருநகரங்களிலும் நடைபெற இருப்பது தெரிந்ததே. 1975 டிசம்பர் 24-ல் தொடங்கி 1976 சனவரி 15 ஆம் தேதி வரை இந்த விழாவை நடத்திடத் திட்டமிட்டு வரும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், விழா ஏற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தலைவரும் தில்லிப் பல்கலைக் கழகப்பேராசிரியருமான டாக்டர் சாலை இளந்திரையன் அவர்கள் இதுபற்றித் தெரிவிப்பதாவது:

சிறிய அளவில் திட்டமிடப்பட்ட பண்பாட்டுப் பெருவிழா இன்று உலகளாவிய பேரார்வத்தை எழுப்பியுள்ளது. சுமார் பதினைந்துக்கும் மேற்பட்ட உலக நாடுகளிலும், உலகின் கவனத்துக்கே வராத சின்னஞ்சிறு தீவுகளிலும் வாழுகின்ற தமிழர்கள் இந்த விழாவை மிகுந்த ஆவலோடு எதிர்நோக்கி. மடல்கள் விடுத்தவண்ணம் இருக்கிறார்கள். ஒவ்வொரு நாட்டிலிருந்தும். இரண்டு பேர் முதல் 5 பேர் வரையில் தான் பேராளர்களாக விழாவில் பங்கு கொள்ளலாம் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. இந்த விதயைத் தளர்த்தி, மேலும் பல தமிழர்கள் விழாவிலே பங்குகொள்ள வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும் என்ற வேண்டுகோள் பல நாடுகளிலிருந்து வந்து கொண்டிருக்கிறது. பல வேறு அரசியல் நெருக்கடிகளில் சிக்கியுள்ள சில வெளிநாட்டுத் தமிழர்கள், "நாங்களெல்லாம் இந்தப் பெருந்தமிழ் விழாவைக் கண்டுகளிக்க வாய்க்குமோ, வாய்க்காதோ?" என்று ஏக்கக் குரலில் மடல்கள் வரைந்து வருகிறார்கள்.

இயக்கத் தலைவர் சாலை இளந்திரையன் அவர்களும் அவருடைய துணைவியார் டாக்டர் சாலினி அவர்களும், இது தொடர்பாகத் தமிழகத்துப்பெருமக்கள் பலரைச் சந்தித்தார்கள்: தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி, கல்வி — சுற்றுலா அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன். நல்வாழ்வுத் துறை அமைச்சர்

பேராசிரியர் க. அன்பழகன், தொழிலாளர் நல அமைச்சரும் விழாவின் காப்பாளர்களிலே ஒருவருமான திரு. க. இராசாராம் ஆகியோர் இவர்களின் ஆர்வத்துக்கு ஊக்கமூட்டி, அரசின் சார்பிலும் தனிப்பட்ட முறையிலும் இயன்ற உதவிகளை எல்லாம் செய்வதாக வாக்களித்திருக்கிறார்கள்

சிலம்புச்செல்வர் ம. பொ. சிவஞானம், துணைவேந்தர் சுந்தரவடிவேலு, குன்றக்குடி அடிகளார், மொழிப் பேரறிஞர் தேவநேயப் பாவாணர், முஸ்லிம் லீக் (தமிழ் நாடு) தலைவர் ஆ. கா அ. அப்துல் சமது, கவிஞர் கருணாநந்தர் ஆகியோரையும், விழாக்குழுவின் சார்பில், சாலைத் தம்பதியர் சந்தித்துப் பேசினார்கள். இப்பெருமக்கள் அனைவருமே, — விழாவின் சீரிய நோக்கத்தை விதந்து பாராட்டியதோடு. — தங்களின் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாக உறுதியளித்துள்ளார்கள்.

வகுப்பு, கலந்துரையாடல். கருத்தரங்கம். சொற்பொழிவு முதலிய நிகழ்ச்சிகள் சென்னையில் பத்து நாட்கள் தொடர்ந்து நடைபெறும். அவைகளிலே தமிழகத்துப் பேரறிஞர் பலரும் பங்கு கொள்ளுவார்கள். தமிழகத்தின் சிறந்த நாவலர்கள் ஆறு பேர் சிறப்புச் சொற்பொழிவுகளை நிகழ்த்துவார்கள். ஒருநாள் நிகழ்ச்சியில், வெளிநாட்டுப் பேராளர்கள், தங்கள் தங்கள் நாடுகளில் தமிழ்ப்பண்பாடும் கலையும் வளர்ந்து வரும் முறைகளை எடுத்து விளக்குவார்கள். தமிழகத்தின் தலைசிறந்த எழுத்தாளர்கள், நாடகாசிரியர்கள். கவிஞர்கள் முதலியோருடன் வெளிநாட்டுத் தமிழர்கள் அளவளாவி மகிழவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

விழாவின் இரண்டாம் பகுதியாகத் தமிழகச் சுற்றுலா ஒன்று ஏற்பாடு செய்யப்படுகிறது. வெளிநாட்டுப் பேராளர்கள், இரண்டு அல்லது மூன்று பேருந்துகளில் சுமார் ஒரு வார காலத்தில் தமிழகம் முழுவதையும் சுற்றிப் பார்ப்பார்கள்; இந்தச் சுற்றுலாவின் போது தஞ்சை. மதுரை. நெல்லை, கோவை, சேலம் ஆகிய பகுதிகளில், பேராளர்களுக்கு வாழ்த்தும் வரவேற்பும் அளிக்கவும் அந்தந்த ஊர்ப் பெரியவர்கள் திட்டமிட்டுள்ளார்கள்.

தஞ்சை மாவட்டத்தின் சார்பில் தஞ்சையில் விழாப் பொறுப்பை ஏற்றிருப்பவர், நூலக ஆணைக்குழுத் தலைவர் முத்துப்பேட்டை ந. தருமலிங்கம் அவர்கள் மதுரைமாநகரில் பு. மனோகரன் அவர்கள் விழாப் பொறுப்பு ஏற்க, கருமுத்து

தி. மாணிக்கவாசகம் போன்ற பெருமக்கள் உற்ற துணை புரிவார்கள். நெல்லையில், பேராசிரியர் பா வளன் அரசுவின் துணையோடு கலைக்கழகத்தினரும் வேறு பொது நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் விழாவை நடத்துவார்கள். கோவையில் விழா நடத்திச் சிறப்பிக்க, பொள்ளாச்சி நா மகாலிங்கம் அவர்கள் இசைந்துள்ளார்கள். வட மேற்குத் தமிழகத்தின் சார்பில் விழாவைச் சேலத்திலே நடத்திடும் பொறுப்பை அமைச்சர் க. இராசாராம் அவர்கள் ஏற்றுள்ளார்கள்.

இந்த 5 ஊர்களிலும் வில்லுப்பாட்டு, பொம்மலாட்டம், பாவைக்கூத்து, பொய்க்கால் குதிரை, கரக ஆட்டம், இலாவணி முதலான நமது பழங் கலைகளில் ஒவ்வொன்றை நடத்திக் காட்ட ஏற்பாடு நடைபெற்று வருகிறது.

இயல். இசை நாடகம். நாட்டியம், தொழில். பொருளாதாரம் முதலான பலதுறைகளிலும் தமிழகத்திலே பலகாலமாக ஏற்பட்டு வந்துள்ள வளர்ச்சிகளையும் மாறுதல்களையும் படம் பிடித்துக் காட்டும் கண்காட்சி ஒன்றும் அமைக்கப்பட்டு வருகிறது.

தமிழ் வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களை அழகுற விளக்கி உலகெங்கும், வாழும் தமிழ்ப் பேரறிஞர்கள் வழங்கும் கருத்துக்கள் அடங்கிய விழா மலர் ஒன்றும் சிறப்பாகத் தயாராகி வருகிறது ஆங்கிலத்திலும் தமிழிலும் அமைந்த கட்டுரைகளையும் ஆய்வுரைகளையும் கொண்ட இந்த மலர், தமிழ்ப் பண்பாட்டின் மணத்தை உலகெங்கும் பரப்பக் கூடிய நறுமலராக உருவாகி வருகிறது

முதலாவது உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக்குக் களமும் வளமும் அமைத்துக் கொடுத்த பெருமைக்கு உரியவர்களான மலேசிய அரசினரை இந்த விழாவின் போது சிறப்பு விருந்தினராக அழைத்துப் பெருமைப்படுத்த வேண்டும் என்ற பேரார்வமும் விழாக்குழுவினருக்கு இருந்து வருகிறது

தமிழகத்துப் பலதுறைப் பெருமக்கள் காட்டிவரும் உற்சாகத்தையும், வெளிநாட்டில் பொங்கிப் பரவும் ஆர்வத்தையும் கவனிக்கையில், தமிழகமே சுமார் ஒருமாத காலம் புத்தம் புதிய பொலிவுக் கோலம் காட்டப் போகிறது என்று பூரிப்போடு தெரிவிக்கிறார் தலைவர் டாக்டர் சாலை இளந்திரையன்.

மணி விழா

பண்ணாராய்ச்சி வித்தகர். ஏழிசைத் தலைமகன் திருமுறைச் செல்வர் திருமுறைக் கலாநிதி குடந்தை ப. சுந்தரேசனார் மணி விழா.

பண்பட்ட பழந்தமிழ் இசையிலும், தேவாரம் திவ்விய பிரபந்தங்களுள் ஊடுருவி நிற்கும் பண்ணிசையிலும் மூழ்கி இடையறாது ஆய்ந்து நுட்பமான உண்மைகளை எழுதியும் பேசியும் நூல்களாக வெளியிட்டும் அயராது பணிபுரிந்து வரும் சிவத்திரு ப. சுந்தரேசனார் அவர்களின் மணிவிழாவைப் பூவாளூர் சைவ சித்தாந்த சபை, அரியலூர் மணிவாசகர் மன்றம், புள்ளம்பாடி ஸ்ரீ இராமகிருட்டின மடத்துச் சன்மார்க்க சங்கம், ஆடுதுறை அப்பர் அருள்நெறிக் கழகம், திருமழபாடி அப்பர் அருள் நெறி மன்றம் கீழப்பழூர் திருஞானசம்பந்தர் அற நெறி மன்றம், புன்செய்ப் புளியம்பட்டி மறைமலையடிகள் மன்றம் செந்துறைத் திருநாவுக்கரசர் மன்றம், திருத்தவத்துறைத் திருவள்ளுவர் கழகம் ஆகிய நிறுவனங்களைச் சார்ந்த பெரு மக்கள் மிகச் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்து வருவது குறித்துப் பெரு மகிழ்வடைகின்றோம்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தோடு நெடிய தொடர்புகொண்டு இசை நாடகக் கலையின் நுணுக்கங்களைப் பேசியும் தமிழ்ப்பொழில் வாயிலாக எழுதியும் பெரும் பணியாற்றி வருதலோடு அருட்டிரு விபுலானந்த அடிகளார் அருளிய யாழ்நூலின் சிறப்பைப் பழந் தமிழ் மரபோடு உலகம் உணரப் பன்முறையானும் விளக்கி இசைத் தமிழ்த் தொண்டராகத் திகழும் பண்ணாராய்ச்சி வித்த கரின் மணி விழா மிகச் சிறப்பாக நிகழத் தமிழன்னையை இறைஞ்சி வாழ்த்துகிறோம்.

மணி விழாவை ஒட்டி ஒரு மலர் வெளியிடவும் அன்னாரின் பண்ணாராய்ச்சி முடிபுகளை நாடாப் பதிவு செய்து பயன் படுத் தவும் விழாக் குழுவினர் ஏற்பாடு செய்து வருவது போற்றத் தக்கது இந்நற் செயலுக்கு இயலிசை நாடக அன்பர்கள் யாவரும் துணைபுரிந்து சிறப்பிப்பார்கள் என நம்புகிறோம். வாழ்க பண்ணாராய்ச்சி வித்தகர் வளர்க அவர் தம் தொண்டு ஓங்குக முத்தமிழ்.

நாரண துரைக்கண்ணனார் முத்து விழா

முதுபெரும் எழுத்தாளர் கலைமாமணி நாரண துரைக்கண்ணனாரின் எழுபதாவது பிறந்தநாள் 24 — 8 — 1975 அன்று வருகிறது. 'ஜீவா' என்னும் புனைபெயரில் ஏராளமான சிறுகதைகளும் நெடுங் கதைகளும் எழுதிப் புகழ்பெற்ற நாரண துரைக் கண்ணனாரின் எழுபதாம் பிறந்தநாளை முத்து விழா வாகக் கொண்டாடச் சிறந்த ஏற்பாடுகள் சென்னையில் நடைபெற்று வருகின்றன. தமிழ் இலக்கண இலக்கிய மரபு கெடாமல் கதைகள் எழுதுவதில் நாரண துரைக் கண்ணனார் மிகவும் வல்லவர். மறைந்த தமிழறிஞர் டாக்டர் மு. வ. அவர்களை நாவல்கள் எழுதுமாறு செய்ததில் இவர்களுக்குப் பெரும்பங்குண்டு. தமிழறிஞர்கள் திறனாய்வாளர்களாக மட்டுமல்லாமல் சிறுகதை நாடகம் முதலிய படைப்பிலக்கியங்களைப் படைப்போராகவும் விளங்க வேண்டுமென்று கருதிப் பாடுபட்டு வரும் திருமிகு நாரண துரைக்கண்ணனார் அவர்கள் நீடுழி வாழ்கவென்று வாழ்த்துகிறோம். அவரது முத்து விழாச் சிறப்பாக நடக்க எம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்

கையறவு

தமிழக அரசின் பிற்பட்டோர் நலத்துறை அமைச்சரும், தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா இவர் தம் உள்ளத்தில் இடம் பெற்ற ஒப்பற்ற தொண்டரும், தமிழக அரசியல் தலைவர் களுள் குறிப்பிடத் தக்கவரும். பிற அரசியற் கட்சித் தலைவர் களாலும் நன்கு மதிக்கப் பெற்றவரும், எளிமை தூய்மை கடமை கண்ணியம் கட்டுப்பாட்டிற்கு எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தவரும், தி மு. கழக அமைப்புச் செயலாளரும், திரா விடன் கிழமை இதழ் ஆசிரியரும், தமிழ் மொழிக்காகவும் தமிழர் உரிமைகளுக்காகவும் பன்முறை சிறை சென்ற தியாக வீரரும், அஞ்சாமையும் அறிவும் அடக்கமும் சான்றவரும், அனைவராலும் அன்புடனும் மதிப்புடனும் என். வி. என். எனப் போற்றி அழைக்கப் பெற்றவரும், தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கட்குப் பெருந் துணையாக விளங்கியவருமான மாண்புமிகு திரு. என். வி. நடராசன் அவர்கள் 3 — 8 — 75 ஆம் நாள் நம்மை விட்டு மறைந்தமை கேட்டுப் பெரிதும் வருந்து கிறோம்

ஈடு செய்ய வியலாத இவ் இழப்பினால் வருந்தும் அவர் தம் குடும்பத்தார் உற்றார் உறவினர் நண்பர்கள் கொண்டுள்ள ஆறாத் துயரில் நாங்களும் பங்கு கொள்கிறோம்,

அவர் தம் சீரிய பணியையும் பண்பாட்டையும் எண்ணி நன்றிப் பெருக்கோடு போற்றி இறுதி வணக்கம் செலுத்து கிறோம். வாழ்க அவர் தம் புகழ்.